
# சித்தி

சித்த வைத்திய திங்கள் இதழ்

ஊ 3 | விசுவாவசு அற்பசி, நவம்பர் 1965 | மணி 1



ஆண்டு சந்தா ரூபாய் ஐந்து

9, கஜபதி நாயுடு தெரு, செனய் நகர்
சென்னை-30

# நல்வாழ்வுப்பணி

## சுதந்தர பாரத சுபிட்ச திட்டங்களுக்கு
## சித்தர்கள் சேவை

நாட்டின் (விவசாயம், கைத்தொழில், வாணிபம், பொருளாதாரம்) முதலிய சமூக அபிவிருத்தி திட்டங்களுக்கு நல்ல தேகாரோக்கியம் மனோதிடம் உள்ளவர்கள் அத்தியாவசியம். நல்ல திட்டங்களை நிறைவேற்ற நல்ல மனிதர்கள் தேவை. ஆரோக்கியமின்மை (வியாதி) மனோதிடத்தை அழித்து முன்னேற்றத்தைத் தடுத்து குன்றச் செய்யும். அத்தகைய தேக மனோவலிமையை அழிக்கும் கொடிய வியாதிகளைச் சித்தர்கள் தங்கள் அருள் வல்லபத்தால், மருந்தால், நீக்கி ஆரோக்கியம் அளித்துத் தேச மத ஞான முன்னேற்றம் அடையச் செய்வார்கள். எல்லாம் வல்ல "சித்தர்களின் அளவிலா பெருமைக்குச் சிறந்த அத்தாட்சியாகவும்" "சித்த மருத்துவத்தின் சிறப்புக்கு" ஒரு எடுத்துக் காட்டாகவும் விளங்கி வருகின்ற

**K. T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின்**

## "மேல்மாயில் மருந்து"

கருநிற செந்நிறப் படைகள், தடிப்புகள், சொறி, மற்றும் துர்நீர் பரவியதனால் ஏற்படும் சகிக்க முடியாத இரணங்கள் முதலிய நீடித்த நாட்பட்ட தீராத சருமரோகங்களுக்குச் சிறந்த நிவாரணி.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

சித்தா டாக்டர்

**K.T. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி & சன்ஸ்**

**5-22, மேல்மாயில் P. O. (N. A. Dt.)**

# இந்த மணியில்


| மாலை 3 | விசுவாவசு, அற்பசி | நவம்பர் 1965 | மணி 3 |
|---|---|---|---|


எண் பக்கம்


1. நோயற்ற வாழ்வு—தலையங்கம் ... 3
2. புற்று நோய் ... 9
3. கைமுறை அனுபவ வைத்தியம் ... 17
4. ஸ்பரிச உணர்வு ... 22
5. சித்த மருத்துவம்—வினு விடை ... 25
6. வேம்பில் ஆயிரம் மருந்து ... 30



"நந்தி" திங்கள் இதழ்

ஆசிரியர், வெளியிடுபவர் :

ஸ்ரீலஸ்ரீ. சுந்தரானந்த சரஸ்வதி

நிர்வாகி :

திருமதி. குட்டியம்மாள் வேணுகோபால்

அலுவலகம் :

"நந்தி" பதிப்பகம்

கஜபதி நாயுடு தெரு, செனுய்நகர், சென்னை-30.

அச்சிடுபவர் :

வள்ளுவர் அச்சகம், சென்னை-12

இந்திய அரசினர் பத்திரிகை

ரிஜிஸ்திரார் பதிவு எண் : 8255

ஆண்டு சந்தா ரூ. 5- (ஐந்து)


"நந்தி"யின் வளர்ச்சிக்கு உங்கள் நன்கொடையை அனுப்பி ஆதரியுங்கள். எவ்வளவு சிறிய தொகையாயினும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

# பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

# டாக்டர் C. A. ஜெயராமன்

அவர்களின்

## சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

*& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50*

**தங்க ரேக்கு குளிகை**

*நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00*

**சிட்டுக்குருவி லேகியம்**

*வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை, உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00*

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

*எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும். 400 Gram ரூ. 6-00*

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

*அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00*

விபரங்களுக்கு :

**டாக்டர் C. A. ஜெயராம்,**

**யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,**

**பழனி.**

# நந்தி

மாலை 3 | 1965 நவம்பர் விசுவாவசு, அற்பசி | மணி


## நோயற்ற வாழ்வு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்". இது தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி. திருவருட் பிரகாச வள்ளலார், தமது இளமைப் பருவத்தில், சென்னை கந்த கோட்டத்தில் திருவாய் மலர்ந்தருளிய முதல் தெய்வீக திருவருட்பாவில், "நோயற்ற வாழ்வினுல் வாழவேண்டும்" என்று சொன்னுர்கள். தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் முனிவர்கள், "நோயில்லா நெறி"யை வகுத்துக் காட்டியிருக்கிருர்கள். அறுசுவை உண்டி சமைத்து சாப்பிடுவது, பருவ காலங்களுக்கு ஒப்ப உணவை உட்கொள்வது போன்ற நன்னெறிகளையும், ஒழுக்கமான வாழ்வையும், பண்பையும் உலகத்திற்குக் காட்டியவர் தமிழர்.

### இன்றைய நிலைமை என்ன?

எளிய, தூய்மையான வாழ்க்கை வாழ்ந்து வந்த கிராம மக்களைக்கூட பாழான நவீன நாகரீகம் பற்றிக் கொண்டது. கிராமங்களில் கழனிகளில் பாடுபட்டு உழைத்து கட்டுமஸ்தான உடற்கட்டுடன் வாழ்ந்த மக்களின் சந்ததியார் இன்று நகரங்களில் குடியேறி விட்டார்கள். டீக்கடைகளும், சினிமாவும் மக்களுடைய உடலையும், உள்ளத்தையும் மாசுபடுத்தி வருகின்றன.

சுகாதாரக் கேடான உணவு விடுதிகளும், அவைகளில் வழங்கப்படும் கலப்படை உணவுப் பண்டங்களும், மக்களிடையே நோய் பரவுவதற்கு முக்கிய காரணங்கள்.

### செய்யவேண்டிய தென்ன?

அடிக்கடி, காபி, டீ அருந்தும் பழக்கத்தை மக்கள் விட்டொழிக்க வேண்டும். சினிமா காட்சிகளுக்குச் செல்வதை நிறுத்த வேண்டும்.

தங்களுக்கோ, தங்கள் மக்களுக்கோ ஏற்படும் பிணிகளைப் போக்க, நவீன மருந்துகளின், விற்பனையாளர்களான டாக்டர்கள் கொடுக்கும் மாத்திரைகளை விழுங்குவதைக் குறைத்து மூலிகைகளையும், சித்த மருந்துகளையும் உபயோகிக்க வேண்டும். முடிந்த வரை ஆஸ்பத்திரிகளுக்குப் போவதைக் குறைக்க வேண்டும். ஆயிரக் கணக்கான மக்கள் தினமும் கூட்டமாகக் கூடும் ஆஸ்பத்திரிகளில் மக்கள் நோய் போக்கும் மருந்துகள் கிடைக்காது. பண வசதியுள்ளவர்களுக்குத் தான் நல்ல மருந்துகள் கிடைக்கும். பல வர்ணங்களில் தயார் செய்யப்படும் தண்ணீர் தான் கிடைக்கும். இதனால் நோய் போகாது. நகரங்களின் நிலைமை இவ்வாறு இருக்க, கிராம வைத்திய சாலைகளின் நிலைமை மிகவும் பரிதாபமானது.

## அரசினர் கடமை

இத்துறையில் அரசினரின் கடமை மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு தலைநகரிலும், வட்டாரங்களிலும் சித்த மருந்து சாலைகளை போதிய அளவில் அரசினர் அமைக்க வேண்டும். அனுபவமிகுந்த சித்த வைத்தியர்களை நியமிக்க வேண்டும்.

இன்னும், தமிழகத்திலுள்ள அறநிலைய மடாதிபதிகள், ஆலய பரிபாலன அதிகாரிகள், தங்கள் மூலதனத்திலிருந்து, ஆங்காங்கு, சித்த வைத்திய நிலையங்களைத் தொடங்க வேண்டும்.

பள்ளிகளில் மாணவர்களுக்கு நோயில்லா நெறியைப் போதிக்க வேண்டும். இளைஞர்கள், புகை பிடிக்கும் கொடிய பழக்கத்தை சட்ட மூலம் தடை செய்ய வேண்டும். இவ்வாறு செய்தால்தான் மக்கள் நோயின்றி வாழ முடியும்.

# அரசினருக்கு வேண்டுகோள்

நவீன மருத்துவர்களுக்கும் ஆயுர் வேத வைத்தியர்களுக்கும் சம அந்தஸ்து. சம்பளம் 1965, நவம்பர் முதல் தேதியிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று குஜராத் மாநில அரசினர் முடிவு செய்திருப்பதாக, பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

தமிழகத்தில், திருநெல்வேலியில் தற்போது அரசினரால் நடத்தப்பட்டு வரும் பி. ஐ. எம். பட்டப் படிப்பு கல்லூரியிலிருந்து தேர்ச்சி பெற்று வெளிவரப்போகும் மாணவர்களுக்கு, எம். பி. பி. எஸ். அந்தஸ்தும், சம்பளமும், உத்தியோக வாய்ப்பும் அளிக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில், இன்னும் அதிகமான ஊக்கமும், ஆர்வமும் காட்ட வேண்டுமென்று தமிழக அரசை வேண்டிக்கொள் கிறோம்.

இக்கல்லூரியில் சென்ற ஆண்டும், இந்த ஆண்டும், சித்த வைத் தியம் படிக்கும் மாணவர்களே யிருப்பதால், இக்கல்லூரிக்கு அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி யென்று பெயரிட வேண்டியது மிகவும் பொருத்தமாகும்.

---

## முக்கிய அறிவிப்பு

*இந்த இதழிலிருந்து "நந்திக்கு" மூன்ருவது ஆண்டு தொடங்கு கிறது. பழைய சந்தா நேயர்களில் பெரும்பாலோர், புதிய ஆண்டுக்கு இன்னும் சந்தா அனுப்பவில்லை. சந்தா புதுப்பிக்காத நேயர்களுக்கு இந்த இதழ் அனுப்பப்படவில்லை. சந்தா அனுப்பி ஞல், இரண்டாவது இதழுடன் முதல் இதழும் சேர்த்து அனுப்பப் படும்.*

## நன்கொடையாளர்களுக்கு நன்றி

*"நந்தியின்" மூன்ருவது ஆண்டுப்பணிக்கு கீழே குறிப்பிட்ட அன்பர்கள் நன்கொடையளித்துள்ளார்கள். அவர்களுக்கு எமது உள்ளங்கனிந்த நன்றி. வசதியுள்ள வைத்தியர்களும், அபிமானி களும் தங்களாலியன்ற அளவு நன்கொடையளித்து "நந்தி"யின் தன்னலமற்ற தொண்டிற்கு ஊக்கமளிப்பார்களாக.*

| | | | |
|---|---|---|---|
| சித்த வைத்தியர் சாது. வி. நாராயணசாமி பிள்ளை ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி சித்த வைத்திய சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. | ரூ. | 200 | 00 |
| வேலூர் சித்த வைத்தியர் பி. வி. எம். குமார சுவாமி செட்டியார். | ரூ. | 25 | 00 |
| விழுப்புரம் சித்த வைத்தியர் ஜி. கே. இராம லிங்கம் பிள்ளை. | ரூ. | 25 | 00 |
| புதுச்சேரி சித்த வைத்தியர் ச. பொ. வசவய்யர் | ரூ. | 10 | 00 |
| பழனி மலையப்பசாமி வைத்தியசாலை பி. சி. கண்ணு | ரூ. | 5 | 00 |
| வழுதாவூர் சித்தவைத்தியர் திருமதி. வி. மங்களம் | ரூ. | 10 | 00 |
| ஏ. ஆர். கன்னபட்டாச்சார், புலிவலம். | ரூ. | 2 | 00 |

# பத்திரிகைகள் வரவு

## " அருட்பெருஞ் ஜோதி "

மாத இதழ் : ஆசிரியர் திரு. வி. எம். கடிகாசலம்,

13 ஸ்ரீ ரங்கம்மாள் தெரு சென்னை 21.

ஆண்டு சந்தா ரூபா. 3-00

முன்பு " புராகரசிவ் கோவாப்பரேட்டர் "

என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருந்த இம்மாத இதழ் இப்பொழுது " அருட் பெருஞ் ஜோதி " என்ற பெயரில் வெளி வந்துள்ளது. இதன் முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம். சுத்தசமரச சன்மார்க்கத்தின் முக்கிய இலக்ஷியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உலகில் பரவச் செய்யும் நோக்கத்துடன், அருட் பெருஞ் ஜோதி, திருவருட் பிரகாச வள்ளலார், எல்லாம் வல்ல சித்தர், மகாத்மா வடலூர் இராமலிங்கப் பெருமானார் வகுத்த வழியை உலகெலாம் உணரும் வண்ணம், திரு கடிகாசலம் அவர்கள் செய்து வரும் திருப்பணி மிகவும் போற்றற் குரியது.

## " உலக க்ஷேமம் "

சித்த சமாஜ மாத இதழ். ஆண்டு சந்தா ரூ. 3. சித்த சமாஜம் வடகரை கோழிக்கோடு மாவட்டம் (மகரளா) சித்த யோகத்தை சமீப காலம் வரை மக்களுக்குப் போதித்து வந்த சிவானந்த பரமஹம்ச குருதேவரின் அருள்வாக்கை உலகில் பரவச் செய்யும் நோக்கத்துடன் இயங்கிவரும் இப்பத்திரிகையை வரவேற்கிறோம். சித்த வேதம் தற்போதுள்ள நாட்டின் சூழ்நிலைக்கு இன்றியமையாத சாதனமாகும்.

## ' மூலிகை மணி '

ஆசிரியர் வேலூர் சித்த வைத்தியர் திரு. ஏ. ஆர். கண்ணப்பன் தனிப்பிரதி விலை 50 காசு. மருத்துவ மாத இதழ். தபால் பெட்டி 26 வேலூர் வடஆற்காடு. ஆண்டு சந்தா ரூ. 5 " நம் நாட்டு மூலிகைகள் " என்ற தலைப்பின் கீழ் " தினமணி " நாளிதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வரும் அன்பர் கண்ணப்பரால் மூலிகை மருத்துவம் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் ஒரு மாத இதழ் நடத்தப்பட்டு வருவது வரவேற்கத்தக்கது.

## ' ஆரோக்கியம் '

ஆயுர்வேத சேவா சமிதி,27 சின்னக்கடை வீதி,திருச்சிராப்பள்ளி 2

ஆண்டு சந்தா ரூ. 3 தனிப்பிரதி 25 காசு.

நோயற்ற வாழ்வைப் போதிக்கும் ஆயுர்வேத மாதப்பத்திரிகை. ஆசிரியர், ஆயுர் வேதாச்சார்யா வி. பி. நடராஜ சாஸ்திரி.

## கிராம வைத்தியம்

*மாத இதழ் : ஆசிரியர் : திரு. எம். ஆர். ஜெகன்னாத ராவ்*

*ஆண்டு சந்தா ரூ. 3-00*

*திருவானைக் கோயில், ஒரக்காட்டுப் பேட்டை போஸ்டு,*

*செங்கல்பட்டு வழி.*

*கிராம வைத்திய சாலைகளில் பணியாற்றுபவர்களின் நலனுக்காக பாடுபடும் பத்திரிகை, நன்கு வளர்ச்சியடையட்டும்.*

---

## வைத்தியர்களுக்கு உத்தியோகம்

*சென்டிரல் போர்டில் பதிவு பெற்ற பரம்பரை வைத்தியர்களுக்கு (B2) கிராம வைத்தியசாலைகளில் உத்தியோகம் கொடுக்கும்படி D. M. S. அவர்களுக்கு அரசினர் உத்திரவிட்டிருப்பதாக தகவல் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே மனுப்போட்டு வேலை மறுக்கப்பட்டவர்கள் மீண்டும் மனுப்போடுவது நலமெனக் கருதப் படுகிறது.*

---

## இராசிபுரம் சித்த வைத்திய சங்கம்

*4-10-65ந் தேதி மாலை சங்க கட்டிடத்தில் சங்கத் தலைவர் திரு. R. முத்தையா அவர்கள் தலைமையில் கூட்டம் நடந்தது. கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*நமது தாய் நாட்டின் மீது பாகிஸ்தானியர் படை யெடுத்துள்ளமைக்கு இக் கூட்டம் வன்மையாக கண்டனம் தெரிவிக்கிறது.*

*தாய் நாட்டின் போரில் ஈடுபட்டு உயிர் நீத்த வீரர்களுக்கு இச்சங்கம் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.*

*நாட்டின் பாதுகாப்பு நிதிக்கு சங்கச் சார்பில் ரூ. 101-00 (ரூபாய் நூற்று ஒன்று) நன்கொடை யளிக்க தீர்மானிக்கப்பட்டது.*

---

**"நந்திக்கு" உங்கள் சந்தாவையும், நன்கொடையையும் தாமதமின்றி அனுப்புங்கள்.**

Telegram : "GURUCURES." P.B. 22 Phone 248

# குரு மருந்துகள்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம்,
ஆங்கிலம் தமிழ் ஆராய்ச்சி முறைகள் கலந்த
அரிய தயாரிப்புகள்

தலைவலி தைலங்களில் மேலானது

## குரு தைலம்

பல்பொடிகளில் தலைசிறந்தது

## குரு பல்பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

குறிப்பு:—போலி பல்பொடிகள் நடமாடுகின்றன
கடைகளில் பல்பொடி வாங்கும் பொழுது
குரு பல்பொடிதானவென்று
கவனித்து வாங்கவும்.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்துசாலை :: திருச்சிராப்பள்ளி-1

தபால் பெட்டி 22

# புற்று நோய்

(கவிராஜ் எஸ். கல்யாணராமன், சித்த - ஆயுர்வேத வைத்தியர்
திருவல்லிக்கேணி, சென்னை-5)

சித்த வைத்தியம் மிகவும் புராதனமானது. பெரும்பாலும், மகாமகத்துவம் பொருந்திய சித்தர்கள் நூல்கள் கவி, செய்யுள்களாக அமைக்கப்பட்டிருக்கிறது. உபமான, உபமேயங்கள்தான், செய்யுளின் கருத்தை விளக்கமாய் அறியும்படி உதவி செய்வன. புற்றுநோய் என்ற பெயருக்கு உகந்தபடி, நோயானது புற்றுபோல் இருக்கவேண்டும். ஆயுர்வேதத்திலும் " வல்மீகம் " என்று குறிப்பிட்ட பெயருடன் க்ஷுத்ரரோகம் 32-ல் ஒன்றாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் புற்று இரண்டு விதங்கள் உண்டு. 1 பாம்பின் புற்று, பாம்பின் புற்றில் இரண்டு விதம் (அ) பூமிக்குமேல் தனிப்பட்ட புற்றாக இருப்பது (ஆ) புற்றின் மேல் புற்றாக இருப்பது. சில நூல்களில் "நாக்குப் பூச்சி மண்ணை புத்துப்போல் வெளியில் குவிப்பதுபோல் " என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதைப்போல் மனித தேகத்தில் வெளிமுகமாக புற்றுப்போல் ஏற்படுவதுண்டு. பெரும்பாலும் புற்றுநோய், மாமிசம் அதிகமாயிருக்கும் இடத்தில், தசைகள் கூட்ட மத்தியிலும் கிளம்புகிறது. சில துவாரங்களுடன் சீழ் ரத்தம் வடியும், சில இடங்களில் குமிழ் போலும், பந்து போலும் கிளம்பி ரணமாகி சீழ் ரத்தம் வடிதல் இது பாம்பின் புற்றை ஒத்த வியாதியை சார்ந்தது.

கறையான் புற்று பூமிக்கு அடிபாகத்தில் சல்லடைக் கண்களோடு கூடி, பெரும் பந்து பந்தாக புற்றாக இருக்கும் இதைப் போல் மானிட தேகத்தின் உள் அங்கமாகிய, குடலைப் பற்றியும், சுவாசப்பை, ஈரல்களைப் பற்றியும் அமைந்திருக்கும். எப்படி கறையான் புற்று பூமியின்மேல் தென்படாமல் உள் அடங்கி இருப்பது போல், கண்டு கொள்வதற்கு இயலாத வகையில் உற்பத்தியாய் விடுகிறது. இது மிகவும் ஆபத்தானது.

## வியாதியின் லக்ஷணமும் தோற்றமும்

புற்றுநோய் முன் சொல்லப்பட்ட முதல் ரகம், சதை பற்றுடைய இரு விலாப்புறங்களிலும், கன்னம் பல் ஈறுமத்தியிலும் ஸ்தனம், லிங்கம், யோனி செவி சுற்றுப்புறம், உள்புறம், ஆசனம், முழங்கால் சதைப்பற்றுள்ள இடங்களிலும், விரல்கள் தடித்து வீங்கி அங்கு ஏற்படுவதுமாக, வெளித்தோற்றத்தில் சில துவாரங்களோடு கூடி, நமைச்சல் சீழ் ரத்தம் கசிந்து கொண்டு, சுரம் தூக்கமின்மை, அந்த இடம் தடித்து வீங்கி புடைத்து புற்றுபோல் கிளம்பி விடுகிறது.

மற்றும் தலை, தொண்டை, புட்டம் முதலிய இடங்களில் பந்து போலும், குமிழ் போலும் கிளம்பி, சில நாள்களில் வலி உண்டாகி உள்ளே புரைவைத்து, புற்றுபோல் வெளியில் கிளம்பி துவாரங்

கள் ஏற்பட்டு, சீழ் ரத்தம் வடிதல் ரோவு உண்டாகும். இவைகள் வெளி முகமாய் அறியும்படியான நிலையில் காணப்படுகிறது.

இரண்டாவதாக கூறப்பட்டதும் தேகத்தின் உள்புறத்தில் குடல் சுவாசாசயம், ஈரல், மலாசயம் முதலிய இடங்களில் உண்டாவதை அறிந்து கொள்வது வெகு சிரமம். தற்காலத்தில் மேல் நாட்டு வைத்திய முறையில் X Ray Photo எடுத்து அறிந்து கொள்வது, சுலபமும், தெளிவாகவும் அறிய ஏதுவான சாதனங்கள் இருக்கின்றன. சித்த வைத்தியத்தில் இதை அறிவதற்கு ஒரு சாதனமுண்டு. சர்வ வல்லமை பொருந்திய, விஞ்ஞானப் பொக்கிஷங்களாய் விளங்குகின்ற சித்தர்கள், வியாதியை அறிய எட்டுவித பரிசோதனைகளில் முக்கியமும், ஆதாரமுமானதாய் நாடி பரிசோதனையை முதன்மையாய் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேல் நாட்டார் (Allopathic System) Pulse துடியை நிமிஷத்திற்கு எத்தனை யென கணக்கிட்டு அறிய சாதகமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சித்தர்கள் நாடியின் துடி, உபமான, உபமேயங்களோடு விளக்கி "மயில் அன்னம், கோழி நடை போலாம்" என்பதுபோல் நாடியின் நடையை நிதானித்து அறிந்து, தேகத்தின் உள் உறுப்பில் உள்ள குறைகளையும், தோஷங்களையும் கூற வழி காண்பித்திருக்கிறார்கள். அவைகள் பழக்கத்தில் இல்லாததால் மறைந்துகிடக்கின்றன. எந்தக் கலையும் சாதனையால்தான் பிரகாசத்தை அடைய முடியும். நாடி நூலை சற்று சாதனை செய்வதால், பழகப்பழகத்தெளிவும், அதன் மர்மமும் பிடிபடும். கல்லூரிகளில் அதிலும் சித்த வைத்தியத்தில் அவசியம் போதிக்கவேண்டும். இந்த நாடி நிதானத்தை அறிந்த நல்லறிஞர்கள் வியாதியை கண்டு கொள்ள வழி இருக்கிறது. வியாதியின் போக்கை யறியவும் சமிக்ஞைகள் இருக்கின்றன.

### நாடி

இந்த புற்று நோய் புண், கட்டி; பிளவை, பறை, புற்று, ரணம், என்பதாக முடிவு பெறுகிறது. இவை பருவத்துக்கு தகுந்தாப் போல் சொல்லப்படும் பெயர்களாகும்.

"கரணிதத்தில் வாதமென்றால் சேதம் வாதம்
காணுமடா சூலையென்றால் சேதம் பித்தம்
விரண முடன் புண் புறைக்கு வாதபித்தம்
விதியரியாப் பீனசந்தான் பித்த சேத்துமம்

(ஆத்மராக்ஷமிர்தம்)"

விரணம், புண் புறைக்கு வாதபித்தம் நாடி இருக்க வேண்டும். வாத நாடியின் இரண்டு பங்கு பித்தத்தில் கலந்து சீறினால், விரணம் புண்புறை ஏற்படுமென்றிருக்கிறது.

"வாயுவினாலே மலசலங் கட்டிடும்
வாயுவினாலே வாங்கிடும் மேல்மூச்சு
வாயுவினாலே மலரூமி ரணங்கள்
வாயுவினாலே வரும் ருத்ர ரோகங்களே

"திருமூலர் நாடி"

வாயுவின் சீற்றத்தால், இரணங்களும், ருத்திர ரோகங்களும் வருமென்று கூறப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாய் வரும் சிரங்கு முதல், கட்டி ரணங்கள் வரை நாடியின் தொந்த ஏற்றத்தாழ்விற்கு தகுந்தாப்போல் உற்பத்தியாகின்றன. இவைகள் சாத்தியமான வியாதியின் நாடி நடைகள் ஆகின்றன.

அசாத்தியமாயும் புற்று நோயாய் அபிவிருத்தியடைந்த பின்னர், நாடியின் அசாத்தியக் குறிகளையும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

"அசாத்தியந்தான் சொல்லுகிறேன் ராசாங்கத்தில்
அறிந்திடவே யின்னமொன்று மடைவாய்க் கேளு
அசாத்தியந் தானீர்க்கோவை சத்தியே குன்மம்
மான தொருவலி குன்மம் யோனிப்புற்று
அசாத்தியந்தான் குறை நோவு நாக்கில் புற்று
அண்டத்தில் பவுத்திரமும் தொண்டைத் தூறும்
அசாத் தியந்தான் முசல் கிறுக்கிஉளவீச்சோடு
ஆறுலுந் தீராது அறிந்து தானே

(ரா ஜாங்க நாடி)

தானென்ற சலக் கழிச்சல் மதமதப்புத்
தலைதனிலே வைத்தெழுந்த பிளவை தானும்
கானென்ற ருத்திரவீதி காசி கண்டமாலை
கன்னத்திற் புற்றுடனே குமர கண்டன்
தேனென்ற மாவாதஞ் சன்னிவாதஞ்
சேத்தும சய முளமாந்தை சுரமாந்தை கவிசை
ஊனென்று உயிரழிக்கு மளவு போகா
துள்ள படி சொன்னோம் வாதனிலை பாரே

(சூதமுனி நாடி)

"வாதபித்தம், ரெட்டி சிலேத்மம், விரணமுடன் புண்புறை, விகற்பமுடன் லிங்கப்புற்று, யோனிப்புத்து மண்டை சூலை, தொந்தரோகம், பல்லறணை, பதுமரோகம், மரணம் வரும் போதளவும் போகாதென்று வைத்தியரே இந்நூலை மகிழ்வித்தோமே"

மேலே சொல்லப்பட்ட நாடி லக்ஷணத்தில் வாதபித்தம் ரெட்டி சிலேத்மம், மிகவும் அசாத்யமானது, இந்த குறிப்பிட்ட நாடியிலே அறியப்பட்டால், இரணம் என்றும் புற்று சம்மந்தமானது என்றும் அசாத்தியம் என்றும் தெளிவாய் சொல்லிவிடலாம்.

இதில் வியாதி கடினமான லக்ஷணங்கள் இருந்தபோதிலும், தப்புவிக்கும் நாடி லக்ஷணங்களும் இருக்கின்றன அதாவது-

வாதமது கீழ்நோக் காதிருந்து
ஸய்யத்திற் சேராதே யனல் தாழ்ாதே
பேதமது செய்யாமற் பிலந்திருந்தாற்
பிராண னங்கே பிலத்திருக்கும் பிசகோயில்லை
நீதமது தப்பியே ஐயத் தோடே
நீர்வாதம் சேர்த்து கீழ் நேரேயோடில்
தீதான வியாதி யெல்லாம் செனிப் பித்தோடும்
சீருடைய வாதநிலை நாடித்தேரே.''

இது மிகவும் முக்கியமான செய்யுள். எவ்வளவு கடினமானதும் பயங்கரமும், அவலக்ஷணங்களோடு, அசாத்திய லக்ஷணங்களோடு கூடிய வியாதியாயிருந்தபோதிலும், வாதநாடியிலே கீழ்நோக்காமல் சேத்துமத்தில் சேராமல், பேத நடைகள் இல்லாது காணப்பட்டால், அந்த வியாதிகளுக்கு சிகிச்சை செய்யலாம். தப்பாது குணமாகும். சித்த வைத்தியத்தில் தான் நாடி நிதானம் வெகு முக்கியமாய் அறிய வேண்டிய அவசியம் கூறப்பட்டிருக்கிறது. நாடி ஞானம் அனுபவத்தில் பயின்றுவிட்டால் எந்த வியாதியாயிருந்த போதிலும், சாத்யா, அசாத்ய மர்மங்கள் அறிந்து சிகிச்சை வெற்றிகரமாய் செய்யலாம் என்பதில் சந்தேகமில்லை.

## புற்று வியாதி வருவதின் காரணங்கள்

பொதுவாய் இந்த வியாதி 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பெரும்பாலும் வருகிறது இந்த நோய் தனிப்பட்ட முறையில் வருவதில்லை. முன்னால் சில வியாதிகளிலிருந்து அது முத்தினபின் புற்று நோயாக மாறிவிடுகிறது. அதனால் இது பயங்கரமான வியாதியாய் கருதப்படுகிறது. பெரும்பாலும் மலச்சிக்கல் இருப்பவர்களுக்கும், மாம்சம் கொழுப்பு பதார்த்தங்கள் அதிகம் புசிப்பவர்களுக்கும், மிஞ்சிய ஸ்திரீ போகத்தினாலும், சுருட்டு புகை பிடிப்போருக்கும், சேற்றில் எப்பொழுதும் வேலை செய்கிறவர்களுக்கும், விஷசம்பந்த பூச்சிகளாலும் சம்பவிப்பதுண்டு. உஷ்ண தேசத்தை காட்டிலும் குளிர்ச்சியான மேல் நாடுகளில் அதிகம் பாதிக்கும். குளிர்ந்த தேசமும், மாம்சம் கொழுப்பு ஆகாரம், புகை உபயோகித்தல் இந்த பழக்கம் மூன்றும் சேர்ந்தால் இந்த வியாதிக்கு இடம் ஏற்பட்டுவிடுகிறது. இத்துடன் வகைதவறிய புணர்ச்சியால் வந்த தோஷமும் சேர்ந்தால் அசாத்தியமாய் விடுகிறது

## 18 சித்தர் நாடி மந்திரம்

"வயல் தனிலே பூளுக மண்ணைத்தானே வருந்தியது புத்துப் போல வத்தையாகும். பயல் மொழியீர் திரேகத்தில் கிருமிதானே பரந்துருகி குட்டம் போல் பள்ளிகாணும், மயலதுவும் கிருமி யுந்தா நடந்து புக்கில் மேனியது சரசரென வெடித்துப் புண்ணும், கயல் பெருகும் குழல் மடவீர் சொல்லக்கேளீர் தரகரத்து சொரி பெருகும் கரப்பந்தானே. மேலே கூறப்பட்ட செய்யுளின்படி கிருமி யால் தான் இது வளர்ந்து முற்றிவிடுகிறது. பூ நாகம் மண்ணை புத்துப்போல் அமைப்பதுபோல் அவஸ்தையினுல் உண்டாக்கி விடுகிறது.

### தொந்த வியாதியில் சம்பவிப்பன

(1) ஆசனத்தில் மூலம் ரணம் சீழ் ரத்தம் கடைசியில் புற்று நோயாக மாறிவிடுகிறது.

(2) ஸ்தனத்தில் புண் வீக்கம் சுரம் புறை கடைசியில் புற்று நோயாக மாறிவிடுகிறது.

(3) யானைக்கால் வியாதியில் ஒரு வகை வீக்கம் புடைத்தல் புறை மேல் சிறு கடிகள், சீழ் ரத்தம் வடிதல் பின்னர் புற்ருக மாறிவிடுகிறது.

(4) தினவு சொறி மேகப்படை நாளடைவில் உள் புறை புற்ருக மாறிவிடுகிறது.

(5) பல்வலி ஈறு வீக்கம் ரத்தம் சீழ் வருதல் வீங்கல் புறை புற்ருக மாறி விடுகிறது.

(6) தொண்டை சிரசுகளில் குமிழ் பந்துபோல் பிளவை கட்டி ரணமாகி சில துவாரங்கள் வைத்து புற்று நோயாக மாறி விடுகிறது.

(7) சம்போக தோஷத்தால் மர்ம ஸ்தானத்தில் ரணமாகி மாம்ச கண்டம் வீங்கி புறைவைத்து கிருமி சேர்ந்து சில துவாரங் கள் ஏற்பட்டு படமுடியாத பாதைகளுடன் சீழ் ரத்தம், நீர் எல்லா துவாரத்திலும் கசிந்து, லிங்கப்புத்து யோனிப்புற்று என்னும் பயங்கர வியாதிகள் சம்பவிக்கின்றன.

### புற்று நோயைப்போல் காணப்படும் வியாதிகள்

ராஜ பிளவையில் சில முளை, ரந்திரம், சீழ் ரத்தம் வடிதல் இறு புற்று நோயாக மாறலாம். வைத்தியர்கள் சந்தேகிக்க இட மிருக்கிறது. பிளவை சாத்யமாகலாம் புற்று நோயாக மாறினுல் அசாத்யமாகலாம்.

சீழ் ரத்த மூலம் ஆசனத்தில் ரணமாகி சில துவாரங்கள் ஏற் பட்டு, புழுக்கள் தோன்றி சீத ரத்தம் வடிதல் புற்து நோயாக

மாறுவதற்கு ஹேதுவுண்டு. இந்த இடத்தில் வைத்தியர் நோயை நிதானம் செய்து சிகிச்சை செய்யவேண்டும்.

மேகப்படை முற்றின பின் சில துவாரங்கள் வீக்கம் ரத்தம் சீழ்வடிதல் இந்த இடத்தில் வைத்தியர் முதலில் படையா அல்லது புற்று நோயா என்பதை யோசிக்க வேண்டும்.

சில இடங்களில் தொண்டை, தலை, தசைகளில் இருந்து கிரந்தி கட்டிகள் கிளம்புகின்றன. நாளடைவில் சில துவாரங்கள் சீழ் ரத்தம் வலி சுரம் முதலிய பாதைகள் ஏற்படுகின்றன. இந்த கட்டத்தில் வைத்தியர்கள் தப்பபிப்ராயப்பட சந்தர்ப்பமிருக்கிறது. புற்று நோயா தசை கிரந்தியா என்பது சந்தேகப்பட இடங் கொடுக்கிறது.

யானைக்கால் வியாதியில் ஒருரகம் வீங்கி உள் புரை வைத்த பின்னர் மேலே சில சிறு குமிழ்போல் கிளம்புகிறது. புத்துபோல் சிறு துவாரங்கள் சீழ் ரத்தம் வடிதல் ஏற்படுகிறது. இந்த இடத்தில் யானைக்கால் வியாதியா புற்று நோயா என்பதை தீர்மானிக்க வேண்டும்.

சம்யோக தோஷத்தால் கொறுக்கு புண்கள் ஏற்படுகின்றன, சில நாள்கள் சென்ற பின்னர் மூத்திர துவாரம் மொட்டில் ரந்தரங்கள் சில ஏற்பட்டு புழுக்கள் உண்டாகி மூத்திரம், சீழ் ரத்தம், சொல்ல முடியாதபாதை இதில் கொறுக்குப் புண்ணு, புற்று நோயா என்பது சந்தேகிக்க இடமிருக்கிறது.

செவியில் சீழ் ரத்தம் துர்கந்தம் புழு வைதது வடிதல் உண்டு. இதில் செவியின் உள்பக்கம் இருந்து கசிவது இருக்கிறது. வெளிப் பக்கத்தில் கட்டி ரந்திரம் சீழ் ரத்தம் வடிதல் உண்டு. இந்த வியாதியில் இரண்டு விதமான புற்று நோயும் சம்பவிக்க இடமளிக்கிறது. இந்த வியாதி குணப்படுத்துவது மிக கடினம். இந்த வியாதியிலும் சந்தேகிக்க இடமுண்டு.

இந்த புற்று நோய் தொந்த வியாதியாகி முற்றின கட்டத்தில் தான் புற்று நோயாக மாறிவிடுகிறது. இதற்கு சிகிச்சை சிரமம், ஆரம்ப கட்டத்திலும், அதற்கடுத்த இடத்திலும் சிகிச்சை செய்யலாம் எடுத்துக் கொள்ளலாம். நோயாளியின் தேக திடகாத்திரம் அசாத்திய லக்ஷணங்கள் சிகிச்சை செய்வதில் நன்மை யுண்டு.

சித்த வைத்தியத்தில்: இதற்கு மருந்தாக உபயோகிக்க அனேக மருந்து வகைகள் நூல்களில் காணப்படுகின்றன. பெரும்பாலும் கந்தகம், பூரம், தாம்பிரம், நாகம், சேங்கொட்டை தைல சம்பந்தங்கள், நீரடிமுத்து சம்பந்தப்பட்ட மருந்து வகைகள் வீரம், காந்தமும், பூவரசு சேர்க்கை மருந்து பலம், கிருத, தைல, மன்ன, லேக்ய பாக சேர்க்கையாக சொல்லப்படுகிறது. இதில் சில பின்னர் வெளியிடப்படும்.

## எனது அருமை நண்பர்களே!

உங்கள் உடல் நலம் பேணுதல் உங்கள் வாழ்வுநிலை உயர்வதற்கு உகந்ததும் அவசியமுமாகும். ஏதேதோ காரணங்களால் எதிர்பாராத பல நோய் நொடிகளுக்கு இலக்காகி கவலையே வாழ்க்கையாக மாறிவிடாமல் இருக்க, வருமுன் காக்கும் நினைவில்லாவிட்டாலும் வந்த பின்னாவது சீரான முறையில் சிகிச்சை பெற்று நலம் பெறுவதற்கு இப்போதே முயற்சித்தால் பயனுண்டு, நல்ல வாழ்வுண்டு. நீங்கள் நேரில் சந்திக்க விரும்பினாலும் சரி, விபரம் தெரிவித்துப் பரிகாரம் நாட விரும்பினாலும் சரி, கீழ்க் கண்ட முகவரிக்கு உடன் எழுதுங்கள். அதிக உஷ்ணத்தாலும், கண் எரிச்சல், தலைவலி, வயிற்றுவலி மலச்சிக்கல், முட்டி, முதுகு, இடுப்புவலி, நரம்புத் தளர்ச்சி, சக்தி நலிவு ஆகிய நோய்களுக்கு நிவாரணியாக உள்ள கீழ்க்கண்ட எமது மருந்துகளை வாங்கிச் சாப்பிடுங்கள். உஷ்ணம் குறையும், ரத்தவிருத்தி ஏற்படும், சக்தி வளரும்.

1. நெ. ஸ்பெஷல் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 33-00
2. நெ. கால்சியம் செட் 1 மாதம் உபயோகிக்கும் 4 மருந்துகள் கொண்டது ரூ. 23-00

*விபரங்களுக்கு :*

தலைமை ஆபீஸ் :

# சிவராஜ்
# சித்த வைத்திய சாலை

சிவதாசபுரம் போஸ்டு

சேலம் 2

# சித்த வைத்திய மருந்துகள்

**ஜவ்சான்:** *வீரிய விருத்திக்கு.*

**பிரிங்கசால் :** *மனத்திற்கு நிம்மதி அளிக்க.*

**ருமோசால் :** *சுக்குலு சேர்ந்தது, வாயு, சூலே, மேகத்தடிப்பு வெட்டை முதலியவற்றிற்கு.*

**சர்பிடின் :** *ரத்தக்கொதிப்பு, மூளைக் கோளாறுகளுக்கு நல்லது.*

**பிரமிலான் :** *மதுமேகத்திற்கு உகந்தது.*

**அசோகாதிலடி :** *மாதவிடாயை வெளிப்படுத்த,*
*மற்றும் பல புதிய மருந்துகள்.*

பற்பம்
லேகியங்கள்
சர்க்கரை பூசப்பட்ட மாத்திரைகள்
விசேஷ மருந்துகள்

எங்கள் நவீன லாபரெட்டரியில் சென்ற 20 வருட காலமாக தயார் செய்து அளிக்கிறோம்.

தமிழ் நாட்டிலேயே ஏர்கண்டிஷன் செய்யப்பட்ட நவீன சாதனங்கள் பொருந்திய மருந்து தயாரிப்புசாலை நமது தான்.

திருவாரூர் மருந்துகள் விஞ்ஞான முறையில் தயார் செய்யப்பட்டவை. ஆகவே உயர்தரமானவை.

## நோயாளிகளுக்கு ஆலோசனை எப்பொழுதும் கூறப்படும்.

*(விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்)*

## டாக்டர் ஸ்ரீவாஸ் கெமிக்கல்ஸ்,

**பார்மகுடிகல் மானுபாக்சரர்ஸ், டிஸ்டிரிபியூட்டர்ஸ் (?) நியூ ட்ரீமென்ட்ஸ்,**
**32, கமலாலயம் வடகரை,**

## திருவாரூர்.

*த. பெ. எண்.* **19** *(தஞ்சை மாவட்டம்) தொலைபேசி.* **142**

# கைமுறை அனுபவ வைத்தியம்

(வைத்தியர் ஏ. என். பழனி, வேலூர், வ. ஆற்காடு)

### சஞ்சீவி சூரணம்

சுக்கு $\frac{1}{4}$ பலம், மிளகு 1 பலம், திப்பிலி பலம், நற்சீரகம் $\frac{1}{4}$ பலம், கருஞ்சீரகம் 1 பலம், இந்துப்பு $\frac{1}{1}$ பலம், பெருங்காயம் $\frac{1}{4}$ பலம், ஓமம் $\frac{1}{4}$ பலம் இவைகளை பொன்மேனியாக வறுத்து இடித்து வஸ்திரகாயம் செய்துகொண்டு மேல்படி சூரணத்திற்கு சம எடை வசம்பை சுட்டு கரியாக்கின பொடியுடன் நன்கு அரைத்துக்கொண்டு குழந்தைகளின் வயதிற்கு தக்கவாறு ஐந்து சிட்டிகைக்குள் காலை, மாலை பாலில் அல்லது வெந்நீரில் கொடுக்கவும்.

**தீரும் வியாதிகள்:**—சீதள சம்மந்த இரைப்பு கபசம்பந்த வியாதிகள், மாந்தம், வாந்தி, வயிற்றிரைச்சல் பேதி முதலியவைகள்.

### சித்தர் சிந்தாமணி சூரணம்

சுக்கு 1 பலம், மிளகு 1 பலம், திப்பிலி 1 பலம், ஓமம் 1 பலம், பொடி செய்து எலுமிச்சம் பழங்களை நாலாக கீறி அவைகளில் மேற்படி சூரணத்தை நிறப்பி மூன்று நாள் வைத்து பிறகு வெய்யிலில் உலர்த்தி சூரணித்து 1 முதல் 1 விராகன் எடை காலையில் சாப்பிட்டு வரவும்.

**தீரும் வியாதிகள்:**—பித்த வாயு, கிறுகிறுப்பு, நெஞ்சு எரிச்சல் வாய் நீர் ஊறல், ஓக்காளம், அன்ன துவேஷம் முதலியவைகள்.

### விரைவாத எண்ணை

சுக்கு 1 பலம், மிளகு 1 பலம், திப்பிலி 1 பலம், ஓமம் 1 பலம், கெச்சக்காய் பருப்பு 1 பலம், வசம்பு 1 பலம், வேப்பங் கொழுந்து 1 பலம், வெள்ளை வெங்காயம் 1 பலம் இவைகளை அரைத்து 1 படி விளக்கெண்ணையில் கலந்து மெழுகுபதமாய், காய்ச்சி வடித்து சிறு கரண்டி வீதம் காலையில் ஏழு நாளைக்கு கொடுக்கவும். வாய்வு பண்டம் நீக்கவும்.

# அகத்தியமுனிவர் பிள்ளைத் தமிழ்

(உதவியவர்: பசுமாத்தூர் வைத்தியர் முத்துக்குமாரசுவாமி)

### காசக் குடிநீர்

கரிய மிளகு திப்பிலி கீழ்க்
காய் வேர் சுக்கு சிறுதேக்கு

கண்டங்காரி சங்கு நெல்லி
களஞ்சி வகையாய்த் தானெடுத்தே

பிருநா ழியாந்தாம் வெள்ளமதில்
இட்டே யெரித்துக் குறுகிவடித்

திடுகாற் படிகொள்ளிப் படியே
யேழு நாளுஞ் சரியாக

பருவ முடன் பத்திய மாகப்
படிவா காயாக் சுவாச மஞ்சும்

பறக்குந் தேகந் தெளிவு தருவும்
பண்ணிக் குடிக்க லென்ன வுரை

அருளே சொரியும் பொதிகைவரை
ஐயா வருக வருகவே

அடியா ரகத்தீ லீசுரனு
மரசே வருக வருகவே.

**விளக்கம்.**

மிளகு, அரிசித்திப்பிலி, கீழ்க்காய் நெல்லி வேர், மேல் தோல் சீவப்பட்ட சுக்கு, சிறுதேக்கு, கண்டங்கத்திரிவேர், சங்கவேர், நெல்லி வேர்ப்பட்டை இந்த எட்டு வகையும் வகை ஒன்றுக்கு வராகனெடை, இரண்டரை சுத்த ஜலம் படி ஒன்று.

மேற்கண்டவைகளில் வேரினங்களைப் பஞ்சுபோல் சிதைத்தும், மற்றவைகளை யிரண்டொன்றாய்ப் பொடித்தும்,

ஷை ஜலத்திற் போட்டு காய்ச்சி எட்டொன்றாய்ச் சுண்டின பின்னிறக்கி வடிகட்டிப் பானஞ்செய்யவும். இவ்விதமே, இந்தப் பிரமாணமாகவே ஒவ்வோரு வேளையும் செய்து கொள்ளவேண்டும். இப்படி காலை, மாலை, யிரண்டுவேளையுமாக ஏழு நாள் உபயோகிக்கவும்.

தீரும் நோய்கள்:—அஞ்சு வகைச் சுவாச ரோகங்களும் தீரும் தேகந்தெளிந்து இரத்த புஷ்டியுண்டாகி தேகம் பலக்கும்.

பத்தியம்:—புளி, புகை, பெண் ஆகியவைகளையும், இந்த ரோகத்தையுண்டாக்குங் காரணங்களையும் தவிர்ப்பதேயாம்.

## கொங்கணர் முப்பூ சூத்திரம்

**(உதவியவர்: வைத்தியர் ஏ. கே. ஆயி ஆண்டி, ஈரோடு.)**

சொல்லும் பூநீர் துடியா மொருபலம்
புல்லுமே படிகாரமிரு பலம்
வெல்லு மாமதி யுப்பு மிருபலம்
சொல்லுமே காரியுப்பு சமனெடை

உடுத்து மண்டக்கல் சுண்ணமிரு பலம்
கொடுத்துமே யொன்றுய்க் கூடவே மாட்டு
தொடுத்து வெண்கருவாலாரைத்திடு
சடுத்துமே பில்லைப் பாங்காயுலத்திடே

உலத்திக் குக்குடமெழிலாகப் போட்டு
அலர்த்துமே சுண்ணமாகவே தானெடு
புலர்த்தியர் சொன்ன போக்கது வாகவே
எலத்திடாமல் எருக்கன் பால் போட்டிடே

போட்டிடச் செய நீராகும் எல்லாம்
மாட் டிடு வறு பத்து முபரசம்
மாட்டிடச் சுன்னம் கடின மகா வேதை
பூட்டினுர் கொங்கணுயர் புகன்றதே

## நாதகுருத் தைலம்

பரை நாதம் பலம் பூதஞ் சுவையாதீதப்
பாங்கான வெடியுப்பு வினையே சேரு

இரக சாரங்களஞ்சு செவியே வாங்கு
இருடையுள்ள மால் தேவி களஞ்சு மூன்று

திரசாதி சூரனு மவ்விடையே நட்சத்
திரங்களஞ்சு நவநீதந்திக்கு மாகும்

உரமான சரக்கதனை நவ நீதத்தோ
டுண்மையாய்க் கல்வமதில் மைபோலாட்டே

உண்மையா யரைத்த பின்பு கலசத்திட்டு
உத்தமனே குழித்தயிலம் வாங்கிக்கொள்ளு

கண்ணியாம் நாதகுருத் தைலமாச்சு
கருவான தைலமிது இடையாதப்பா

பண்ணுகிற மருந்து வகைக் கெல்லாமிகும்
பண்பான இதிற்கொஞ்ச மிட்டுப் பார்த்தால்

மண்ணில் வருங் குருமுப்பு இதற்கொவ்வாது
மானிலத் தோர் பிழைப்பதற்காய் விளம்பினேனே.

**பூ நீரென்பது:—** தை, மாசி பங்குனி மாதங்களில் உவர், நிலத்திற் பூர்க்கக் கூடிய உப்பாம்; தச தீட்சையென்பது மேற்கண்ட பூ நீருப்பைப் பத்துத் தடவை கரைத்தும், பத்துத் தடவை காய

வைத்தும் உப்பெடுப்பதென்றிக் காரியுப்பென்பது கஞ்சியுப்பைத் தண்ணீர்விட்டுக் கரைத்துப் பத்துத்தடவை காய்ச்சி உப்பெடுப்பதாம்.

வெடியுப்பை ஐந்து தரங்காய்ச்சி யெடுப்பதற்கும் பெயர் ஐந்தாம் காய்ச்சல் வெடியுப்பாம் என்பன. 4வது பாட்டு வெள்ளைக் கல்லென்பது உவர் நிலத்தினடியிலிருக்க வெள்ளைக் கல்லாம். அக்கல்லைக் கொண்டுவந்து காளவாயில் வைகவைத்து நீற்றிச் சுண்ணம்பு எடுப்பது. வீரம்பூரம் போட்டு என்பது-வீரம் புல மரைக்கால் என்க.

சிறு பீளையென்பது—பீளைக் செடி, குருச்சுண்ணமென்பது—முப்பு.

**செய்பாகம்**

கெந்தகம் பலம் 5 வெடியுப்பு பலம் 2. நவச்சாரங்களஞ்சு 2 அரிதாரங் களஞ்சு 8. வீரங்களஞ்சு 3. பூரங்களஞ்சு 1. பசுவின் வெண்ணெய் பலம் அ. ஆகிய இந்த ஆறு சரக்குங்களையுங் கல்வத்திட்டு வெண்ணெயைச் சேர்த்தரைத்துக் குழித்தைலம் வாங்கிய அந்தத் தைலமே நாத குருத்தைலமாகுமென்றறியவும்.

**அரும் பதவுரை**

பரை நாத மென்பது — கெந்தகம்,
பலம் பூதமென்பது — ஐந்து பலம்,
சுவை யாதீதப் பாங்கான் வெடியுப்பென்பது —வெடியுப்பு
வினையே சேரென்பது—நல்வினை தீவினை இரண்டு சேரு,
கிரக சாரம் என்பது—கிரகங்கள் நவமாகையால் நவக்
[சாரம், செவியென்பது—இரண்டாகும்,
மால்தேவி யென்பது—அரிதாரம்,
திரசாதி சூரனென்பது—வீரம்,
நட்சித்திரமென்பது—பூரம்,
நவநீதமென்பது—வெண்ணெய்
திக்கென்பது—எட்டு என்ப.

## மேகநாத தைலம்

**(சித்த மருத்துவர் எம். திருஞான சண்முகம், மதுரை)**

**மருந்துகள்:**

1. கெந்தகம் 2. அரிதாரம்
3. மைசிக்காந்தம் 4. மிருதார் சிங்கி
5. வேம்பாடும் பட்டை 6. ரசம்

7. வெள்ளைக்குங்கிலியம் 8. ஆடுதின்னாப்பாளைச்சார்
9. நல்லெண்ணெய் வகை 1-க்கு 2 விராகனிடை

**செய் முறை** :—ஆடு தின்னாப்பாளைச் சார்விட்டு மேலே கண்ட மருந்துகள் அனைத்தையும் கல்வத்தில் அரைத்து எடுத்துக் கொண்டு நல்லெண்ணெய்படி ½ ஆடு தின்னாப் பாளைச் சார்படி ½ கலந்து அடுப்பேற்றி தைலமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும்.

**தீரும் நோய்கள்** :— தலையில் ஏற்படும் பொடுகு, ஊனீர் கசிவு, தலையில் மீன் செதில்கள் போன்று பக்குகள் கொண்ட படை, தலையில் சாம்பல் தூசி போன்று வரும் நோய்கள், சிரங்கு மேகத் தடிப்பு, ஊரல் போன்ற நோய்கள் தீரும்.

**குளிக்கும் முறை**: —வெந்நீரில், சீயக்காய், அல்லது இலுப்பைப் பிண்ணாக்கு போன்றவைகளை தைலம் தேய்த்து குளிக்கும்போது உபயோகிக்க வேண்டும்.

**குறிப்பு**: தைலத்தை இரவில் தேய்த்து காலையிலோ அல்லது காலையில் தேய்த்து மாலையிலோ குளிப்பது மிகவும் சிறந்தது.

எண்பது வாத நோய்களைக் கண்டிக்கும் ஈக்காடு கிராம

# மொச்சைக்கொட்டை எண்ணெ

அநேக தலைமுறைகளாக புகழ் பெற்றது

சித்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்ட பற்பம். செந்தூரம், லேகியம் மெழுகு தைலம் . சூரணம் முதலியவை கிடைக்கும்.

**ஈ. பி. இராகவன்**
(அரசாங்கப் பதிவு பெற்ற சித்த வைத்தியர்)

## ஷண்முகம் வைத்தியசாலை

2–68, மேட்டுத் தெரு — ஈக்காடு.
திருவள்ளூர் தாலூக்கா, செங்கற்பட்டு ஜில்லா.

# ஸ்பரிச உணர்வு

(சித்த யோகி டி. என். சி. என். சோமநாதர், மதுரை)

(முன் இதழ் தொடர்ச்சி)

அநேக கொடிய காரமுள்ள திராவகங்கள் விஷவித்துக்கள், பாஷாணப்புகைகளாலும் சருமம் நோய்கொள்ள ஏது வாகிறது. சர்மத்தில் உள்ள வர்ண ரசாயனம் சிதைவு பெருவதால் வெண்குஸ்ட மென்ற நோய் தோன்றி, மனித அழகைக் கெடுத்துவிடுகிறது. இது சித்தமருத்துவ முறையில் சுலபமாக தீர்த்துவிடக் கூடியதாகும்.

இனிமையான சங்கீதம், வாத்திய இசைகள், பக்தியான சீலங்கள், வழிபாடு, புனிதர்களின் திவ்ய விஷயங்களை கேட்டல் முதலியன சர்மத்திற்கு ஆனந்த உணர்வையும் ரோமாஞ்சலியையும் ஏற்படுத்துகிறது. சிற்சில நோய்களில் (குஸ்டம் செவ்வெட்டை) சர்மம் பெரிதும் பாதிக்கப்பட்டு உணர்ச்சியை இழந்துவிடுகிறது. ஆரம்பத்திலேயே இதைக் கவனிக்கத் தவறின் பெரும் சிரமத்திற்குள்ளாக வேண்டி இருக்கிறது.

சிற்சில ஒளிக்கிரணங்கள் சருமத்திற்கு விஷேச கவர்ச்சியையும் நோய்களையும் நீக்குகிறது. இது மாலை வெயிலில் திறந்த வெளியில் கிடைக்கிறது. இதை நன்குணர்ந்த மேல் நாட்டினர் சூரிய வெப்பக்குளியல் என்று கொண்டாடுகிருர்கள். சருமத்தின் நிறம் அநேகமாக ஒருவருக்குள்ளபடி ஒருவருக்கில்லை. ஒரே உடலில் கூட ஒரு இடத்திற்கு ஒரு இடம் பேதப்படுகிறது. சில மருந்துகளுக்கு குறிப்பிட்ட சில நிறமுடைய பசுவின் பாலை விட்டு அறைக்கவோ சேர்க்கவோ சொல்லுகிறது சித்த மருத்துவம். இது ஒரு விஞ்ஞான அடிப்படையாகும்.

தாய் தகப்பனின் நிறத்தை அனுசரித்தே குழந்தையின் சருமம் அமைகிறது. சருமத்தின் மூலமே அநேக தொற்று நோய்கள் விரைவில் பற்றிக்கொள்ளக் கூடுமாதலால் சருமத்தை பாதுகாப்பது நீண்ட நோயற்ற வாழ்வு பெற முதல் படியாகும். பூனை நாய், அணில் பறவைகள் மனிதனைவிட சிறப்பாக தன் சருமத்தை பாதுகாத்து அழகாக இருக்கிறது. சருமப் பாதுகாப்பிற்கென்றே இயற்கையாக கொடுக்கப்பட்ட உடல் ரோமத்தை மனிதர்கள் சதா க்ஷவரம், முடி வெட்டுதல் மூலம் வெட்டிக் களைந்து தோலுக்குக் கடினத் தன்மையும் நோய் தடுப்புத் தன்மையும் குறைத்துக் கொள்கின்றனர்.

ஆதிவாசிகளும் இருடிகளும், மகாராஜாக்களும், தற்காலம் சீக்கியர் போன்ற வீரமக்களும் தன் தன் ரோமங்களை நசிப்பிக்காமல் இருந்தனர். இது தேவை இல்லை என்றிருந்தால் இறைவன் நமக்கு அது தோன்ருமலே படைத்திருப்பான். ஆண் சருமம் கடினமாயும் பெண்ணின் தோல் மிருதுவாயும் இருக்கிறது. இதன் காரணமாவது ஸ்திரீகளுக்கு சுரதம் ரத்தம் சுக்கிலம் இம்மூன்றும்

உண்டு. சம்யோக சமயத்தில் அவர்களுக்கு முதலில் சுரதமென்ற நீரும் இரத்தமென்ற சுரோணிதமும் உண்டாகும். கருப்பை திறந்திருக்குமாளுல் நீரும் சுரோணிதமும் அதில் விழுகிறது. அப்போது ஸ்திரீயினுடையதோ புருடனுடையதோ அதில் யாருடைய சுக்கிலம் முன்னே போய் முட்டை வடிவாய் விழுகிறது.

இதில் புருடனுடைய சுக்கிலம் கருப்பையில் விழுந்த பின் ஸ்திரீயினுடைய சுக்கிலம் முட்டை வடிவாய் விழுந்ததாளுல் அது ஒரு சிசுவாய் தீரும். அது முட்டை வடிவாய் விழாவிட்டால் சுரோணிதத்தில் விழுந்து கறைந்துவிடும். அதனுல்தான் ஆண்களின் தோல் கடினமாய் இருக்கக் காரணம். அதே விதமாய் முட்டை வடிவாய் ஸ்திரீயினுடைய சுக்கிலம் கற்பப்பையில் விழுந்தபின் புருஷனுடைய சுக்கிலம் முட்டை வடிவாய் விழுந்தால் அதுவும் ஒரு சிசுவாகிறது. அப்படி முட்டை வடிவாய் ஆகாது அந்தப் புருஷனுடைய சுக்கிலம் சுரோணிதத்தில் விழுந்தால் அது சுரோணிதத்தில் கரைந்துவிடும். இது பெண் குழந்தையாகும். இதனுல் தான் பெண்கள் சருமம் மிருதுவாகக் காரணம்.

சருமமானது! உணர்ச்சிகளின் வாயிலாயும் ஆரோக்யத்தின் கவசமாயும், உள் கருவிகளை மூடி வைத்த போர்வையாயும் அமைந்து கலைக்கும், கற்பனைக்கும் காதலுக்கும், கவர்ச்சிக்கும் மூலகாரணப் பொருளாக மனிதனை உருவப்படுத்தி உயர்த்திக்காட்டுகிறது. உலகில் உள்ள எல்லா ஜீவிகளின் தோலை எவரும் எந்த உபயோகத்திற்கும் இதுவரை உபயோகித்ததாகத் தெரியவில்லை. இனிமேல் எப்படியோ!! எப்படியேனும் மனித உருவகத்தை பூரணமாகிக் காட்டுவது சருமமாகும்.

---


## ஒரு வேண்டுகோள்

சென்டிரல் போர்டில் பதிவான சித்த வைத்தியர்கள், தாமதமின்றி, அடையார் கூட்டுறவு மருந்து உற்பத்தி சாலையில் அங்கத்தினர்களாகச் சேரவேண்டும். சென்டிரல் போர்டாரால் அளிக்கப்பட்டுள்ள பதிவுப் பத்திரத்தின் நகல் ஒன்றை டைப் அடித்து, ஒரு கெஜட் பதிவான உத்தியோகஸ்தரிடம் அத்தாட்சி வாங்கி, பங்கு ஒன்றுக்கு ரூ. 5·/ 25 பைசா வீதம் கட்டவேண்டும். பங்குதார் விண்ணப்ப பாரம் தேவையானுல்,

**அடையார் கூட்டுறவு மருந்து சாலை**

பலகை வாரரவதி ரோட், :: மதருஸ்-20

என்ற முகவரிக்கு எழுதவும்.

# தி இந்தியன் மெடிகல் பிராக்டீஷனர்ஸ் கூட்டுறவு பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிமிடெட் X 185.

**அடையாறு, மதருஸ்-20.**

தபால் பெட்டி 907, போன் **71013. 71014**

தலைவர் : Dr. V. நாராயணசாரி H.P.I.M.,

உபதலைவர் : M. A. பத்மநாபராவ். L.I.M

**அங்கத்தினராகும் வாய்ப்பு :**

1. இந்திய யூனியன் முழுவதிலுமுள்ள மாகாணங்களில் பதிவு பெற்ற வைத்தியர்களும், மற்றும் பட்டம் பெற்ற வைத்தியர்களும்.
2. பஞ்சாயத்து முனிஸிபாலிடி மற்றும் இந்திய வைத்திய இலவச ஆஸ்பத்திரி நடத்தும் குழுக்களும் கழகங்களும்.
3. பிரதம கூட்டுறவு சங்கங்களும் மத்திய கூட்டுறவு சங்கங்களும்.

நாங்கள் சிறந்த முறையில் சாஸ்திரீய முறைப்படி ஆயுர்வேத, சித்த, யூனானி மருந்துகளைத் தயார் செய்கிறோம்.

எங்களுடைய மருந்துகளைப் பதிவு செய்யப்பட்ட மருந்து ஷாப்புகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

**எமது புதிய வெளியீடுகள்:**

| | | | |
|---|---|---|---|
| 1. | வைத்திய யோகரத்னாவளி | (ஆங்கிலம்) | ரூ. 6—50 |
| 2. | ,, | (தெலுங்கு) | ரூ. 6—00 |
| 3. | சித்த பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. 3—00 |
| 4. | ,, | (தமிழ்) | ரூ. 3—00 |
| 5. | யூனானி பார்மகோபியா | (ஆங்கிலம்) | ரூ. 3—00 |
| 6. | ,, | (தெலுங்கு) | ரூ. 3—00 |
| 7. | ரசரத்ன சமுச்சயம் | (தெலுங்கு) | ரூ. 10—5 |

**கிளைக் காரியாலயங்கள் :**

1. 29-3-20 பொட்டி பொட்லவாரி வீதி, கவர்னர்பேட்டை விஜயவாடா (ஆந்திர ராஜ்யம்).
2. 264, காட்டன்பேட்டை பெங்களூர்-2 (மைசூர் ராஜ்யம்)
3. நகர விற்பனை நிலையம் :—4-186 மவுண்ட்ரோட், சென்னை-2.
4. கிளை விற்பனை நிலையம்:—வைஸ்ய ஹாஸ்டல், கச்சிகூடா ஸ்டேஷன் ரோட், ஐதராபாத்.
5. 46, தெற்கு மாசி வீதி, மதுரை-1

Y. கொண்டல் ராவ்,
காரியதரிசி.

# சித்த மருத்துவம்: வினா—விடை

"ஜமுசுபுலே"

**1. மருந்து என்றால் என்ன?**—மருந்து என்னும் சொல்லை பொருள் கொள்ளும் பொழுது ம் என்றும் அருந்து என்றும் விரியும், ம் மாயாவைக் குறிக்கும். மாய் என்றால் மறைவது, ஆ என்றால் உண்டாவது, மறைவதும் உண்டாவதும் அனாதியாக நடக்கின்றன. ஆதல் பற்றியே, சைவ சித்தாந்தத்தில் இறைவன், உயிர், உலகம் என்பன வற்றில் மாயா உலகத்தை உணர்த்துகிறது. மாயையை உலகம், பாசம், மலம் என்ற பல பொருள்பட கூறுவது உலக மரபு.

ஆகவே உயிரினங்கள் உலகின் கண் நுகர்வது இரண்டு—இன்பம், துன்பம், உண்டாகச் செய்வது இன்பம். மறையச் செய்வது துன்பம். பகுத்தறிவு பெற்ற மனிதன் இன்பத்தை பெரும்பாலும் விரும்புகிறான். ஆனால் துன்பத்தை வெறுக்கிறான்.

துன்பத்தை அனுபவிப்பது உயிரோடு கூடிய உடல், உடலில் லாமல் உயிர் துன்பத்தை நுகராது.

எனவே, உயினங்களுக்கு உலகின் கண் ஏற்பட்ட துன்பத்தை போக்கி இன்பத்தைத் தரும்படியான பொருளை அருந்துவதையே அல்லது செய்கையைச் செய்வதையே மருந்து எனப் பட்டது.

திருமூலர் மருந்தைப்பற்றி பின் வருமாறு திருமந்திரத்தில் கூறுகிறார்.

மறுப்ப துடல்நோய் மருந்தென லாகும்
மறுப்ப துளநோய் மருந்தென ச்சாலும்
மறுப்ப தினிநோய் வாராதிருக்க
மறுப்ப தூசாவை மருந்தென லாமே.

நாலடியாரில் ஒரு சமணமுனி அடியில் கண்டவாறு உரைக்கிறார்.

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.

கார் நாற்பதில் மதுரைக் கண்ணங் கூத்தனார் கீழ் வருமாறு பாடியிருக்கிறார்.

வந்தென செய்குறி வாரார் அவரென்று
நொந்து ஒருத்திக்கு நோய்தீர் மருந்தாகி
இந்தின் கருவண்ணம் கொண்டன்று எழில்வானம்
எந்தும் பேணத் நுதல்.

ஐந்திணை எழுபதில் ஒருபுலவர் கூறுகிறார்:

> ......... .....................மறவல் வயங்கிழைக்கு
> இன்னல் இல்லையால் யாயோ கண்ணோட்டத்
> தின்னுயிர் தாங்கு மருந்து.

பழமொழி நானூறில்

(1) பொருந்தாப் பழியெனும் பொல்லாப் பிணிக்கு
மருந்தாகி நிற்பதாம் மாட்சி.........................

(2) கண்டறிவார் போலேர் செழீ இயின்மை செய் வாரைப்
பண்டறிவார் போலாது தரமும் அவரே போல்
விண்டோரிஇ மாற்றி விடுதல் அதுவன்றே
விண்டற்கு விண்டல் மருந்து.

திருவள்ளுவர் தம் திருக்குறளில் கீழ் வருமாறு கூறுகிறார்

1. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான் கண் படின்.

2. மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.

3. உற்றவன் தீர்ப்பான் மருந்து உழைச் செல்வனென்று
அப்பாற் நாற் கூற்றே மருந்து.

4. மருந்தோமற்று ஊன் ஓம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த இடத்து.

திணை மொழியில்

> "மருந்தின் தீரா மண்ணின் ஆகாது
> அருந்தல முயற்சியின் அகற்றலும் அரிதே
> தான் செய் நோய்க்கு தான் மருந்தாகிய
> தேன் இமிர் நறவின் தேறல் போல"

திணை மொழியில்

> "அருந்துயர் அவலந் தீர்க்கும்
> மருந்து பிறிதில்லை யான் உற்ற நோய்க்கே

கூறப்பட்டிருக்கிறது.

## 2. மருத்துவம் என்றால் என்ன ?

மருத்துவம் என்ற சொல் இற்றை நாளில் புற உடலின் நலன் ஒன்றை மட்டுமே குறிப்பதாகிறது. பண்டை நாட்களில் அகவுடலின் நலத்தையும் பேணினர். உயிரினங்களுக் கெல்லாம் உலக வாழ்வில் இன்பமும் துன்பமும் இரண்டுண்டு. துன்பத்தை வருத்தம் என்று சொல்வாருமுளர். நோய் என்றும் கூறுவர். இவ் வருத்தம் உடல் வருத்தம் (உடல் நோய்) உள வருத்தம் (மன நோய்) என இரண்டு பெரும் பிரிவுகளாம். இவ்வாறு ஏற்

படும் வருத்தங்களை இனி வாராமல் இருக்கவும் வந்தபின் மருந்து கொடுத்து பரிகாரம் செய்யும் செயலுக்கு மருத்துவம் எனப்படும். ஆகவே துன்பத்தை போக்கக் கூடிய காரியமாகிய மருத்துவ செய்கைக்கு பயன்படும் சாதனங்களை எல்லாம் மருந்தென்றனர்.

### 3. மருந்து எத்தனை வகைப்படும் ?

வீர மருந் தென்றும் விண்ணோர் மருந்தென்றும்
நாரி மருந் தென்றும் நந்தியருள் செய்தான்
ஆதி மருந் தென்றறிவார் அகவிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே.

இப்பாட்டில் இரண்டு கருத்துகள் உள்ளன. ஒரு சாரார் கருதது.—உலகிற்கு நந்தியருள் செய்தது மூன்று மருந்துகள். அவை (1) வீரமருந்து (பாடாணங்களைக் கொண்டு மருந்து செய்யும் முறை) (2) விண்ணோர் மருந்து (தெய்வ மருந்து) மூலிகைகளைக் கொண்ட மருந்து முறை (3) நாரி மருந்து (திரு அருள் மருந்து. சக்தி மருந்து) அறுவை, கார சாரங்களாகிய மருந்து முறை என்று விளக்குவர். இந்த மூன்று மருந்துக்கு மேம்பட்ட ஆதி மருந்தாகிய சோதி மருந்துளது என்றனர். ஆதி மருந்தாகிய சோதி மருந்தைத்தான் சித்த மருந்து என்ற கருத்தை உரைக்கப் பட்டுள்ளது என்றனர்.

**மற்றொரு கருத்து:—**

உடலின் கண் காணப்படும். திருவருள் துணையால் ஊறும் சிவக்குடிநீர் ஒன்றுண்டு, அதுகடல் அருகே தோன்றும் சிற்றூறல் போல் இனிப்புடையதாக இருக்கும். அவ்வூறலுள் ஏற்றமிட்டு இறைப்பது ஒப்ப உடலின் கண் ஒருவழியாகிய நெஞ்சத்திடத்துத் திருவடி மறவர் நினைப்பாகிய சிவநீரை இறைத்தால் உடலுக்கு நடலையாகிய கலக்கம் ஏற்படாது. இவ்வித இறைப்பை சித்தமார்க்கத்தால்தான் அடையப் பெறுவர்.

ஆகவே, காயகற்ப முறையை சித்த மார்க்கத்தால் அடைவதை சிறந்த மருந்தென்றும், தெய்வ மருந்தென்றும், திருவருள் மருந்தென்றும் இதனை நந்திதேவர் கூறினார். இதனை ஆதி மருந்தென்றும் சோதி மருந்தென்றும் சித்த மருந்தென்றும் உண்மையுணர்ந்தவர் கூறினர் எனப்பட்டது.

**4. "சித்தர" என்றால் என்ன:**—"சித்தாந்தம்" என்னும் சொல்லுக்கு முதல் பகுதியாக நிற்பது. "சித்து"

சித்து என்பது 'சித்' என்றும் 'சித்து' என்றும், சித்தம் என்றும் பல சொற்களால் ஒன்றையே குறித்து விளங்கா நிற்கிறது. இதனையே மனம் என்று கொள்வாருமுளர். ஆகவே, ஆன்மாவின்

நான்கு செயல்களுக்கு வெவ்வேறு பெயர்களுண்டு. தொழிலால் நான்காகவும் தத்துவத்தால் ஒன்றாக தோன்றும்.

ஆன்மா ஒன்றை நினைக்கும் செய்கையை மனம் என்றனர்.

ஆன்மா ஒன்றை நினைத்த பிறகு அதனை ஆலோசிக்கும் செய்கையை புத்தி என்றனர்.

ஆன்மா ஒன்றை நினைத்து அதனை ஆலோசித்து அதன் பாகு பாட்டினை அறிந்து ஒரு முடிவுக்கு வரும் செய்கையை அறிவு அல்லது 'சித்தம்' என்றனர்.

ஆன்மா மேற் சொன்ன முடிவை செய்கையால் அமுலுக்கு கொண்டு வருவது அகங்காரம் எனப்பட்டது.

எனவே ஆன்மா, மனதினால் நினைத்து, புத்தியினால் ஆலோசித்து சித்தத்தினால் முடிவுக்கு வந்து அகங்காரத்தினால் பூர்த்தி செய்கிறது.

ஆராயுமிடத்து, அறிவினால் முடிவுக்கு முடிவு உணர்த்தியதை "சித்தாந்தம்" என பொருள் கொள்ளப்பட்டன என தெரிய வருகிறது.

அறிவு என்னும் சொல்லும்படியான சித்தத்தினால் முடிவுக்கு முடிவு கண்டு உலகுக்கு பொருள் கூறி உபதேசித்தவர்களை அறிவர்களெனப் பட்டனர்கள். அவ்வறிவர்களையே பிற்காலத்தில் சித்தர்கள் எனப்பட்டனர். சித்தர்கள் கண்ட முடிவுக்கு முடிவை 'சிவம்' என உலகறிய ஓதினார்கள். சித்தர்கள் இம்முடிவுக்கு வந்தமையால் மாயையால் ஏற்பட்ட தம் உடலையும் உயிரையும் சேர்த்து ஒன்றை சிவமயமாக்கிக் கொண்டார்கள். இதனால் என்ன தெரியக் கிடக்கிறதென்றால் உயிர் உடலை விட்டுப் போகாமல் இருக்கையிலேயே உடலை உலகத்தில் பிணமாக கிடத்தாமல் உடலையும் உயிர் மயமாக்கி சிவமாகுவது. இவ்வித அற்புதச் செயல்களுக்கு 'சித்திகள்' எனப்பட்டன. சித்திகள் பெற்ற இச் சித்தர்கள் என்ற ஒரு சாரார்கள்தான் இவ்வாறான திடமான கொள்கையை அல்லது மார்க்கத்தை கைவரப் பெற்றார்கள். மற்றவர் இக் கொள்கைக்கு புறம்பாக நின்றார்கள். இம் மார்க்கத்திற்கு சித்த மார்க்கம், சுத்தமார்க்கம் சைவ மார்க்கம் எனப்பட்டன.

சுருங்கக் கூறில் மாயையினால் ஏற்பட்ட உடலை உலகில் பிணமாக கிடத்தாமல் உயிரோடு உடலையும் சேர்த்து கருமத்தால் பிறப்பு இறப்பு இல்லாமலும் கருணையினால் "தோன்றுவதும் மறைவதும்" என்பதாகினும் முடிவில் சிவமயமாகி சதா ஆனந்தமாய் இருக்கின்ற முடிவைத்தான் "சித்தாந்தம்" என்ற சொல் குறுகி "சித்த" என்றும் "சித்தா" என்றும் மருவி உலக வ்ழக்கில் இன்றிருக்கிறது.

**சித்த மருந்து என்றால் என்ன**

சித்தர்கள் தங்கள் உடலையும் உயிரையும் சிவமயமாக்க அநேக மார்க்கங்கள் தேடினார்கள். இம் மார்க்கங்களில் மருந்தும் ஒன்று. இதனை திருமூலர்,

"ஆதி மருந்தென் றறிவார் இகலிடஞ்
சோதி மருந்திது சொல்ல வொண்ணாதே"

என்று திருமந்திரத்தில் கூறியிருக்கிறார்.

மற்றும் சித்த மருந்தையே வீரமருந்தென்றும் விண்ணவர் மருந்தென்றும் நாரி (திரு அருள்) மருந்தென்றும் சோதி மருந்தென் பேரறிஞராகிய திருமூலர் கூறுகிறார்.

தேரையர் சித்த மருந்தின் தனிச் சிறப்பை வேறெந்த மருந்திலுமில்லை என்று கீழ் வருமாறு கூறுகிறார்

மணிமந் திரவழித மார்க்கந் தெரிந்து
பிணிக ளறிந் தொதுக்கிப் பின்னும்—தணியா
வுடலை வளர்த்திடலா லுத்தியினா லால்
பிடகர் வைத்தியர்க்குப் பேர்.
செய்யு மணிமந் திரவழித நன்முறைமை
யைய மிலாம லறிந்தவரே—வைய
மிசைமா னிடரெனிலும் விண்மருத்து ராகி
யிசைவார் குருவாய் எனக்கு
தணியாத நோயுந் தணியப் புரியும்
மணிமந் திரவவிழ்த் மார்க்கப்—பிணியை
உசாவி யியற்றுமறி வுள்ளவரைக் கண்டால்
மசாவும் பயப்படும் மா.

மற்ற மருந்துகளுக்கு புறம்பாகவும் மற்ற மருந்துகளில் சொல்லப்படாததுமாகிய சித்த மருந்து சிறந்து மிளிர்ந்து அன்றும் இன்றும் என்றும் கன்னி மருந்தாகவே துளிர்விட்டு சோதியாய் பிரகாசிக்கிறது. இந்த சித்த மருந்தில் அடங்கியுள்ளவை.

(1) சித்தாந்தம்
(2) மருந்து, மந்திரம், மணி
(3) இரச வாதம்
(4) சோதிடம்
(5) யோகம்.

இவைகளை தனிச் சிறப்பாக தனக்கே கொண்டுள்ளதுதான் சித்த மருந்து.

**சித்த மருத்துவம் என்றால் என்ன ?**

சித்த மருந்து முறைகளை கசடறக் குருவின் கிருபையால் கற்றுணர்ந்து உலகின்கண் உயிரினங்களுக் குற்றப் பிணிகளை அல்லது வருத்தங்களை போக்கி இகத்தில் நோயற்ற வாழ்வை தந்து பரத்தில் உயிரோடு கூடிய உடலையும் சேர்த்து சிவமயமாக்கும் பரிகாரச் செயலுக்கு சித்த மருத்துவம் எனப்படும்.

# வேம்பில் ஆயிரம் மருந்து

("வழிநடைச் சித்தன்")

"வேம்பில் ஆயிரம் மருந்து" என்னும் பழமொழி தமிழகத்தில் சாதாரணமாக வழங்கி வருகிறது. எங்கும், எல்லா இடத்திலும், ஏராளமாக காணப்படும் வேப்பமரம், உலகிற்கு பலவிதப் பயன்களை யளிக்கிறது.

சின்னாட்களுக்கு முன், வேப்பமரத்தினால் மக்களுக்கு ஏற்படும் பயன்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ரஷிய நாட்டு மருத்துவ விஞ்ஞானி ஒருவர் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்து பல முக்கியமான தகவல்களைச் சேகரித்ததோடு, இதனை தங்கள் நாட்டில் பயிரிடுவதற்காக வித்துக்களையும் மூட்டை கட்டிக் கொண்டு போனார் என்பது குறிப்பிடத்தக்கது.

நகர மக்களைவிட, கிராம மக்களே இம்மரத்தின் உபயோகத்தை அதிகம் உணர்ந்து, அதனை தங்கள் வாழ்க்கையின் இன்றியமையாத சாதனமாகப் போற்றி வருகின்றனர்.

மாரியம்மனுக்கு வேப்பிலையை அணிவிக்கிறார்கள், குழந்தைகள் முதலிய அனைவருக்கும் ஏதாவது தோடம் கண்டால் வேப்பிலை அடிக்கிறார்கள். மந்திரமோ, தந்திரமோ, அதைப்பற்றி ஆராய வேண்டியதில்லை. வேப்பிலையின் காற்றுப்பட்டாலே உடலுக்கு நலம் ஏற்பட்டு விடுகிறதென்பது மட்டும் உண்மை.

வேப்பமரத்தை வீட்டினருகே வளர்ப்பதன் காரணம் இதுதான்.

வேப்பம் பூ மிகவும் மணமுள்ளது. சித்திரை மதி, முதல் நாளன்று தமிழர்கள் வீட்டில் வேப்பம் பூ ரசம், பச்சடி வைத்துச் சாப்பிடுவது வழக்கம். ஆண்டு தொடக்கத்திலேயே வேப்பம் பூ யுடன் வாழ்வைத் துவக்குகிறார்கள். தமிழ் மக்கள், வேப்பம் பூவை நெய்யிலோ, எண்ணெயிலோ பொரித்து, சாதத்தில் கலந்து சாப்பிடலாம். வேப்பம் பூவை வாட்டி தலையில் கட்டி வைத்தால், பேன், ஈர், சுண்டு முதலியவை வராது. கூந்தலும் செழித்து வளரும். வேப்பம் பூவை சாப்பிடுவதால் குடல் சுத்தமாகும். அஜீர்ணம் ஏற்படாது. பத்திய உணவுக்கு வேப்பம் பூ பெரிதும் பயன்படுகிறது. வேப்பம் பூவை வறுத்து இடித்துத் தூளாக்கி கொதிக்கும் வெந்நீரில் போட்டு காப்பி போல் தயாரித்து சாப்பிடலாம். சென்னை நகரில் ஒரு வைத்தியர் வீட்டில் வேப்பம் பூ காப்பியையே விருந்தினர்களுக்கு அளிக்கிறார்கள்.

வேப்பம் குச்சி பல் துலக்க உதவுகிறது. வேப்பம் எண்ணெய் வாத நோய்களுக்கு நல்லது. சிறு குழந்தைகளுக்கு வரும் மாந்தத்தைக் குணப்படுத்தும்.

பாண்டிய நாட்டில் பண்டைய பாண்டிய அரசர்கள் தங்கள் வெற்றியின் சின்னமாக வேப்ப இலை மாலையை அணிந்து வந்தார்கள் எனக் கூறப்படுகிறது. வேப்பிலைக் கொழுந்தும், சோற்றுப்பும் அரைத்து உருண்டை செய்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால், ஈரல், குலைக் கட்டி நிபுணர்களிடமிருந்து குழந்தைகளைக் காப்பாற்றலாம். வேப்பம் பூ, வேப்பம் கொட்டையின் பருப்பு, பெருங்காயம் இவற்றை அரைத்து ஒரு மெல்லிய சீலையில் தடவி நரம்புச் சிலந்திகளுக்குக் கட்டினல் குணமாகும். வாந்திபேதி வந்த காலத்தும், வேப்பம் இலையையும், மஞ்சளையும் கஷாயம் வைத்துச் சாப்பிட மிகவும் நல்லது.

விஷசுரம் பரவிய காலத்தில், வேப்பம் வேர்ப்பட்டை கஷாயத்தை உட்கொள்வது, காய்ச்சல் வந்தாலும் குணமாகும். தடுப்பாகவும் உபயோகிக்கலாம்.

உங்கள் வீட்டின் முன் பக்கத்தில் மறக்காமல் ஒரு வேப்ப மரத்தை பயிர் செய்து வையுங்கள்.

"இயற்கை நமக்கு அளித்துள்ள மூலிகைகளை முறையாகப் பயன்படுத்தத் தெரிந்தால், தீராது என்று மேனாட்டு வைத்தியர்கள் கைவிட்ட பல நோய்கள் கூடத்தீரும்" — காந்தியடிகள்.

---

## வைத்திய அன்பர்களே !

உங்களிடம், உங்கள் முன்னோர்கள் கையாண்டு வந்த வைத்திய ஏட்டுப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள் இருந்தால், அவற்றை நகல் செய்து அனுப்பினல் பிரசுரிக்கப்படும். வீணுக கரையான் அரித்துப் போகவிட்டு விடாதீர்கள். எல்லோருக்கும் பயன்படும்படி செய்யுங்கள்.



ஆசிரியர்
"நந்தி"

உடம்பின் வெப்பத்தை ஒரே அளவில்
சீராக வைத்திருக்கும் வேலையை
சருமம்தான் செய்கிறது. இந்த வெப்ப
நிலை கூடினாலும் குறைந்தாலும் நோய்
வந்துவிடுகிறது. மிதமிஞ்சிய
உஷ்ணத்தினாலும், குளிரினாலும்
சருமம் பாதிக்கப்படுகிறது.

உங்கள் சருமம் வலிவுடனும், பொலிவுடனும் வளம் பெறவும், திரேக தத்துவத்தைச் சீராய்க் காத்துக்கொள்ளவும்.

ரிஜிஸ்டர் நிர். 3010

மந்தித்தோப்பு மணிகட்டி சுவாமிகள்

# சர்வரோக சஞ்சீவித் தைலம்

ஸ்நானம் செய்யுங்கள்



தயாரிப்பவர்கள்:
ச.பெ.வடிவேல் நாடார்
அன் சன்ஸ்.
மந்தித்தோப்பு
மணிகட்டி சுவாமிகள்
சித்த வைத்தியசாலை,
25, டவுன் ஹால் ரோடு,
தபால் பெட்டி
நிர். 106 மதுரை-1
தந்தி: "THAILAM"
போன்: 2745

## பழனி யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,

# டாக்டர் C. A. ஜெயராம்



அவர்களின்

## சித்த மருந்துகள்

**No. 1. நாகபஸ்பம், காட்டுக்கருணை லேகியம்**

& ஸ்பெஷல் மூல முளைக் களிம்பு. நவ மூலங்களையும் நிர்மூலமாக்கும் 24 வேளை மருந்து செட் 1-க்கு ரூ. 7-50

**தங்க ரேக்கு குளிகை**

நாடி நரம்புகளை வலுப்படுத்தும், வீரியம் தரும் 50 குளிகை ரூ. 7-00

**சிட்டுக்குருவி லேகியம்**

வயோதிகத்தை மாற்றி வாலிபம் தரும். இளமை, உணர்ச்சி, ஆண்மை தரும். 100 Gram ரூ. 10-00

**பெரிய பவழ பஸ்பம் கலந்த சிவனப்பிரகாஷ்**

எனும் நெல்லிக்காய் லேகியம். சகல உஷ்ணம், வெட்டை, குடற் சூட்டைத் தணித்து ஆரோக்கியம் தரும். 400 Gram ரூ. 6-00

**குன்மாதி செந்தூரம் & குன்ம குடோரி லேகியம்**

அஷ்ட குன்மத்தையும் நீக்கும். பலவருட வயிற்று வலியையும் குணப்படுத்தும். 1 செட் ரூ. 15-00

விபரங்களுக்கு:

**டாக்டர் C. A. ஜெயராம்,**

**R. I. M. P.**

**யாழ்ப்பாணசாமி வைத்தியசாலை,**

**பழனி.**

Telegram : "GURUCURES." P.B. 22 Phone 248

# குரு மருந்துகள்

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம்,
ஆங்கிலம் தமிழ் ஆராய்ச்சி முறைகள் கலந்த
— அரிய தயாரிப்புகள் —

தலைவலி தைலங்களில் மேலானது

## குரு தைலம்

பல்பொடிகளில் தலைசிறந்தது

## குரு பல்பொடி

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதவை

*குறிப்பு:*—போலி பல்பொடிகள் நடமாடுகின்றன
கடைகளில் பல்பொடி வாங்கும் பொழுது
குரு பல்பொடிதானவென்று
கவனித்து வாங்கவும்.

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்,
குரு மருந்துசாலை : : திருச்சிராப்பள்ளி-1
தபால் பெட்டி 22